




ஓலை 136| ஓசை 259| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



'தொல்காப்பியச் செம்மல்'
ச வே சுப்பிரமணியன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

## பொருள்

இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவி அறிவு ஆகும்;
பகைவருக்கும் உட்புகுந்து அழிக்க இயலாத கோட்டையும்
அந்த அறிவு ஆகும்


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நீரகம் பொருந்திய ஊரகத் திரு!

**பாவகை : காவடிச் சிந்து**




வண்ணமின்றி வானவில்லு மில்லை -
கார் வண்ணமின்றி மழைமேக மில்லை - நீர்
வளமு மில்லாவூர்
வாழ வழியில்லை
அறிக - வாழ - தெரிக!

கோள்களின்றி விண்ணுலக மேது - செங்
கூர்கதிரு மிலாவுலக மேது - புவி
கோலு முயர்ந்திடாது
கோளும் சுழலாது
நீரு - மின்றி - பாரு!

மலையின்றி அருவியேது பாரு - வான
மழையின்றி அருவியாறா கூறு? - இரண்டும்
இல்லா ஊரிருந்தால்
இன்ப வாழ்வேது
நீரே -உயிரின் - வேரே!




நீர்வளமும் நிலவளமும் தானே - உயிர்
நிலைத்துவாழ சான்றாகுந் தானே - நன்
னீரும் இலாயிடத்தில்
நீயும் வாழாதே
நினைத்து - நீரைப் பெருக்கு!

**இலக்கணக் குறிப்பு:**
மூச்சீ ரிரட்டைக்குப் பிறகு, முடுகும் தனிச்சீர் எடுப்பும் கொண்டவை. ஒவ்வொரு பாட்டின் முதலிரண்டு அடியின் ஈற்றுக் சீர்கள், தனிச் சொல் வருவதற்கு முன், ஈற்றடியின் மூன்று சீரில் முதல் சீரும் மூன்றாம் சீரும் இயைபுத் தொடையால் வருவதாகும்.

(மில்லை - மில்லை; அறிக - தெரிக.என்று முதல் பாட்டி வந்துள்ளவைப் போல)



## பாவகை : நேரிசை ஆசிரியப்பா

உள்ளம் நாளும் உள்ளில் பேசும்
கள்ளம் செய்திடக் கடிந்தே திட்டும்
பள்ளம் தேடியே பரவும் வெள்ளம்.
துள்ளும் சொற்களும் துடிக்க வைக்கும்.
அள்ளும் இன்பமும் அலையென எழும்பும்
உள்ளிடத் தொடருமே உறக்கம்
தள்ளிப் போகவே துவளும் மெய்யே.

கவிஞர் செ. கலைவாணி

## பா வகை: சிந்து



கையறு நிலையிலும் கண்டிடு நல்வழி
        கனவிலும் கொண்டிடு கலங்கரை நல்லொளி - என்றும்
வையமும் காட்டிடும் வழிகளை உன்வழி
        வாழ்த்திடு வணங்கிடு வலிகளே பொன்மொழி - வாழ்வில்
*தையலாய் மாறுமே தாங்கிடும் மனவலி
        தன்னையே செதுக்கிடும் தகவினை நீயளி - உனக்கோ
ஐயமும் எதற்கினி ஆண்டிடு பெரும்வெளி
        ஆற்றலைக் கொண்டுநீ அகற்றுக இருள்வெளி

*தையல் - அழகு

இலக்கணக் குறிப்பு:
*பா வகை*: *சிந்து* என்ற இசைப்பாடல். இதில் இன்று *கழிநெடிலடி எண்சீரிரட்டைச் சமநிலைச் சிந்து*
(ஒவ்வோர் அடியிலும் எட்டுசீர்கள் / நான்கு அடிகள் / நான்கு அடிகளும் எதுகையில் /முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் மோனை/ 3 மற்றும் 7 ஆம் சீர்களில் மோனை சிறப்பு /இரண்டு அடி நடுவே தனிச்சொல் / ஆக முதல் மூன்று அடிகள் பின்னும் தனிச்சொல் மூன்றாய்/ தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் அளவொத்து / ஈற்றுச்சீர் சந்தமாய் )

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

ஒட்டு வீடுகள்
தேடியும் தென்படவில்லை
சிட்டுக்குருவிகள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தொலைதல்



காசு பணம்
தொலைத்தார்கள்
பாத்திரம் நகைகளை
தொலைத்தார்கள்.

சிலர்
பிள்ளைகளைத்
தொலைத்தார்கள்.
பெரியவர்கள் தொலைவது
வழக்கமாகிட.
பெற்றோர்களைத்
தொலைத்தலோ
வாடிக்கையானது.

தன்மானத்தையும்
சுயகௌரவத்தையும்
உரிமைகளையும்
தொலைக்கலாயினர்.

எல்லாவற்றையும்
தொலைக்க முற்பட்ட
மனிதர்கள்.

மரங்களையும்
நதிகளையும்
தொலைத்ததற்கா
வருத்தப்படவா போகிறார்கள்.
மனம் தொலைத்த மனிதர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பசப்புறு பருவரல்

அதிகாரம் : 119

அவன் எனைப்பிரிய
அன்று உடன்பட்டேன்.
அதனால்கொள் பசலைநிறம்
அதைபற்றி யாரிடம்சொல்வேன்.

அவன்தந்த செருக்கில்
எனைக்கொண்ட இந்நோய்.
என்னுடல் முழுதும்
பசலையாய் படர்கிறதே.

பிரிந்தவனென் அழகையும்
நாணத்தையும் கொண்டுசென்றான்.
காமநோயையும் பசலைநிறத்தையும்
எனக்கேன் அளித்தானோ?

அவனையே நினைக்கின்றேன்
அவன்பற்றியே பேசுகின்றேன்.
அஃதிருந்தும் இப்பசலையெனது
அழகுடம்பை ஏன்கொள்கிறதோ?

ஒன்றாய் இருந்தவன்
பிரிந்து தூரம்சென்றானோ.
என்றெண்ணி என்மேனி
பசந்துபோனதை சொல்லவோ?

விளக்கு அணைந்திட
இருள் பரவுமாப்போல்.
அவன் விலகிட
பசலை எனைக்கவருமே.



அவன்தழுவிக் கிடந்தபோது
சற்றே புரண்டுபடுத்தேன்.
எனைஉடனே பசலைவந்து
பற்றிக் கவர்ந்ததே.

பசலைநிறம் கொண்டாளென
எனைப்பழிக்கும் ஊரார்.
இவளைப் பிரிந்தானென
அவனைப் பழிக்காததேனோ?

அவன் மகிழ்ந்திருப்பானெனில்
அதனால் என்மேனியில்.
தினம் பசலைப்பரவிடல்
எனக்கும் இன்பமே.

நான் பசலைகொண்டவளென
ஊரார் தூற்றிடினும்.
அவன் அன்பில்லாதவனென
தூற்றாதிருத்தல் நலமே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வேங்குழல் பிடித்த வேந்தன்

வண்டின் இசைதரும் யமுனைத் துறைமுனை
வாசல் மலரொளி விரிந்திடும் நிலவில்.

வேங்குழல் ஓசையால் விழித்திடும் உலகம்
வேந்தன் திருவடி விளங்கிடும் பொழுதில்.

முரளி இசையென முரசொலி பரவி
மோகினி கண்கள் மயங்கிடும் சுகமே.

கோபிகள் மனதின் குழலினில் துயிலும்
கோவிந்தன் ஓவியம் கண்ணினில் நிறையும்.

தீங்கு தடுக்கும் திருப்பாதம் தழுவ
தேவர் வணங்கிடும் தெய்வமாம் கருணை.

இருள் களையுமோர் இசைவேந்தன் இவன்
இன்பம் தருவோர் எங்கள் கேசவன் தானே.



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் செங்கல்பட்டு மாவட்டம்

# திலைப்பவனுக்கு



சாதி இல்லா சமத்துவ உலகை சாதி.
நிதிகளில் நில்லாமல் மாலையிடும் நீதி.
விதிகளில் விளையாடாமல் வெற்றியே உன்மதி.
உயர் எண்ணங்களை உள்ளத்தில் துதி.
உழைக்கும் பொழுதுகளை உனக்குள் மதி.
முயற்சிப் படிகளை ஒவ்வொன்றாய் மிதி.
முன்னேற்றப் பாதையில் முக்கியத் தடம் பதி.
முடிவுகளை உலகம் பேசும் மீதி.
நம்பிக்கை நாணயம் உன் இரு கை.
நாளைய வாழ்வே இருக்கை.
மனத்துள் நிர்ணயத்து வை பணி.
மனசுக்கு தினமும் அதுவே அணி.
உதடுகளில் புன்னகை அணி.
தடைகளை தினமும் உடை.
தன்மானமே உனக்கான உடை.
பிணங்களாய் மாற்றும் சோம்பல்.
பிடித்து வைத்து மாற்று மாண்பால்.
திறக்கட்டும் தினமும் எண்ண நடை.
திரும்பும் திசைகளில் ஏது தடை.
வாழ்வே திறம்பட நம்பிக்கை வை
வாழ்வில் சிறப்புற நம்பி கைவை.
இலக்கெது என நீயே தீர்மானி.
இல்லையேல் உனக்குள் நீ தீராப் பிணி.
எண்ணச்சிறகு கட்டி மனங்களைத் தட்டு.
ஏற்ற நடையில் எவரெஸ்ட்டை எட்டு.
வண்ண மலர்களாய் வாழ்த்துகள் கிட்டும்.
எழுந்து ஏற்று நிலையை மனதுல் எழுது.
விழுந்து கிடந்தால் விதையே பழுது.
விளைந்த பின் விருட்சமே விழுது.
உன்னால் முடியும் என்ற மனதோடு பற.
உனக்குப் பின் ஓடிவரும் பிற.

கவிஞர் இளையவன் சிவா

கனவு என்னும் நதியில் நீந்தி
என் வாழ்க்கை எனும் படகை செலுத்துகிறேன்
வெற்றி என்னும் தீவை நோக்கி
துணிவுடன் பயணிக்கிறேன்
கனவுகள் கலைவதில்லை
கையாள தெரிந்தால்
தோல்விகள் பயமுறுத்துவதில்லை
சமாளிக்க தெரிந்தால்
என் கனவுகள்
என் கையில்
என் எதிர்காலம்
என் கையில்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# வாழ்க்கை கடினமில்லை பாப்பா

பள்ளிக்கூடம் போக வேண்டும் பாப்பா
பிள்ளைத்தமிழ்ப் பாட வேண்டும் பாப்பா
கலைகள் பல கற்க வேண்டும் பாப்பா
உயிர் இரக்கம் காட்ட வேண்டும் பாப்பா
ஒழுக்கத்தை உயிரென காத்திடு பாப்பா
சினத்தில் கூட உள்ளத்தால் சிரித்திடு பாப்பா
வெற்றி மட்டும் வாழ்க்கை இல்லை பாப்பா
தோல்வியையும் தாங்க வேண்டும் பாப்பா
சின்னஞ்சிறு கவிதைப் போல பாப்பா
சிந்தனையைத் தூண்ட வேண்டும் பாப்பா
தடை பல வந்தாலும் பாப்பா
தன்மானம் விலக்காதே பாப்பா
எந்த ஒரு சூழலிலும் பாப்பா
தன்னம்பிக்கை இழக்காதே பாப்பா
நட்பு துன்பத்தில் சிக்கும் போது பாப்பா
அறிவுரை கூறாதே ஆற்றுப்படுத்து பாப்பா
உன்னிடம் உரைப்பது யாரானாலும் பாப்பா
மூடநம்பிக்கைகளை எதிர்த்திடு பாப்பா
உயர் எளிமை பழகிடு பாப்பா
உயிர் வாழ்க்கை கடினமில்லை பாப்பா



கவிஞர் ஆதின் ஆரா, அருப்புக்கோட்டை

# முகவரி

மனிதர்க்குத் தாய்தந்தை பெயரின் எழுத்தே
வாழ்நாளில் நிலைத்திட்ட முகவரி ஆகும் !

மலர்களுக்கு வண்டுகளை ஈர்க்கும் வாசம்
முகவரியாய் அழைத்துவந்து தேனைக் கொடுக்கும் !

முகப்பினிலே எழுதிட்ட முகவரி எல்லாம்
ஒருமுறைதான் வாடிக்கை யாளர் அழைக்கும் ;

முனைப்பினாலே உழைப்புதந்த பெயரும் புகழும்
நிலைத்திட்ட முகவரியாய் நாளும் ஈர்க்கும் !

புகழ்கொண்டோர் யாவருமே தங்கள் ஊரின்
முகவரியாய் மாறிடுவார் பெருமை ஏற்பார் !

நிலைத்திட்ட திருக்கோயில் எல்லாம் அமைத்த
மன்னர்கள் முகவரியாய் இன்றும் பேசும் !

தொழுதிட்ட தெய்வங்கள் என்றும் விரும்பி
முகவரியாய் அடியார்தம் நெஞ்சில் வாழும் !

இறந்தபின்னும் உலகினிலே முகவரி காண்பார் ;
ஈந்திட்ட அறக்கட்ட ளையில் வாழ்வார் !



கவிஞர் ஆ. சி. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# செவ்விதழ்

கதிர் படும் பொழுதில்
காரிகை கடந்தாள்.
கன்னல் விழியால்
காப்பியம் வரைந்தாள்.

நீ நின்ற இடத்தில்
நானும் நின்று போகிறேன்.
சுவடுகள் தேடி.

வைகறையில் வானவில்
விழி வரைந்த ஓவியம்
வெண்ணிலா வருகை.

போக்கு காட்டும் விழிகள்
போக மனமில்லாமல்
கடந்து செல்லும் கால்.

தேவதை உறங்கவில்லை
தூது விடும் பொழுதுகள்.
மனம் விரும்பும் பதிலை
எதிர்பார்த்து ஏக்கத்துடன்
காத்திருக்கும் பொழுதுகள்.

விழி விடும் தூது
மொழி தடுமாற
முளரிப்போல் விரிந்த
செவ்விதழ்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# படிக்க முடியாத பக்கம் அவள்

முழுப் புத்தகத்தையும் வாசிக்க துணிந்தவர்கள்
அழுக்குப் படிந்து.
சற்று எழுத்து மறைந்த பக்கத்தை
வாசிக்க முன் வரவில்லை
அதில் மறைந்திருக்கும் மனக் குமுறல்களும், சோகங்களும்
யாருக்கும் தெரியப் போவதுமில்லை

எல்லோராலும் வாசிக்கப்பட்ட பக்கங்கள் யாவும்
சோகத்தால் மறையப்பட்டு வந்த சந்தோசங்களே
யாவரும் வாசித்த விடயம்
அவர்கள் வாசிக்காமல் விட்ட பக்கங்களை
யாரோ ஒருவராவது வாசித்து இருந்தால்
அவளுக்கு சற்று ஆறுதலாவது கிடைத்திருக்கும்

அவளும் அதே வருத்தத்துடன்
பொய்யான சிரிப்பிலே மனதை புதைத்து விட்டாள்
இன்னும் என்ன தான் தீர்வு இருக்கப் போகிறது
ஆழ் மனதிலே கவலைகளை விதைத்து விட்டாள்
யாருமற்ற தனி மரமாய் இருக்கிறாள்
அவளுக்கான விடியலை தேடிக் கொண்டு இருக்கிறாள்

எல்லோராலும் வெறுக்கப்பட்டு விட்டாள்
விழி திறந்து விண் பார்த்து
சிறகடித்த அந்த இளம் வயதில்
பல கனாக்களோடு
சாதனை படைக்க இருந்தவள்
சிறகிழந்த பறவையாய் வீழ்ந்து விட்டாள்

இப்போது மௌனத்தால் இயங்குகிறாள்
அவளின் வைராக்கியத்தோடு
பல கனவுகளை சுமக்கிறாள்
அத்தனையும் சரியாகிவிடும் என்றே
மீள நினைக்கிறாள்
படிக்க முடியாத பக்கமே அவள்தான்



கவிஞர் முஹம்மட் றாபி ஷேபா கானம், இலங்கை

# மயக்கும் விழிக்குள் வியப்பு எதற்கு?



சிந்தையைக் கவர்ந்தவளே
சிற்றிடைத் தேன்கனியே
சில்லென்ற தென்றலாய்
சிலிர்த்திட வைத்தாயே

சிறுநகை புரிந்தாயே
சிதறித்தான் போனேனே
சிறுநடை அழகியே
சிந்தனையில் நிறைந்தாயே

சிருங்கார தேவதையே
சிலையான வடிவமே
சித்திரமாய் இதயத்தில்
சிறகை விரித்தவளே

சிற்பியின் உளியால்
செதுக்கிய தேவதையே
செந்தமிழ் காவியமே
செவ்விதழ் ஓவியமே

சித்தமும் கலங்குதடி
சின்னவள் வனப்பினிலே
சிரிப்பால் மயக்கியவளே
சித்திரவதை என்னுள்ளே

மயக்கும் விழிக்குள்
வியப்பு எதற்கு?
சிறகின்றியே பறக்கிறேன்
சிவந்த வானத்திலே

சிற்றிடை அசைவினில்
நாடியெல்லாம் நர்த்தனமாடுதே
சின்ன இதயத்தில் குடியிருக்க
அனுமதி தந்திடுவாயே

காதலின் உணர்வில்
களிப்பானது உள்ளமே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்



மழை பெய்ததலால் உயிர்கள் வாழும்
பிழைத்தால் மண்ணுயிர்கள் இன்னலிலே ஆழும்

உணவு தயாரிப்பாளராய் திகழ்வது நீரே
உணவாயும் தானேயாவது நீரின்றி யாரே?

உரிய பருவத்தில் மாரி பொழிதலே நன்று
அரிதானால் பசியே நிலவும் மனிதனைக் கொன்று

மழைவளம் என்றும் குறையாத செல்வம்
தழையும் பிழைக்க துளியின்றி இருந்தால் நிறையாதே செல்வம்

எக்குளமும் வற்றினால் வாழ்வதெப்படி முக்குலம்?
அங்குலம் அங்குலமாய் கொட்டினால் தழைப்பது எப்படி எங்குலம்?

விசும்பு வீழாமல் பைம்புல் தழைக்காது
பசும்புல் செழிப்பின்றி மனிதகுலம் பிழைக்காது

கொடை தராவிடினும் குறையும் குருதிபோல் ஆங்கே
கடல் மேகத்திற்கு நீரை வழங்காவிடினும் நீர்வளம் குன்றும் இங்கே

மழை பொழிவதால் தேவர்களைப் பூசிப்பர்
விழைந்து பொழியாவிடின் யாவரும் யாசிப்பர்

மழைவளத்தால் நடந்திடுமே தானமும் தர்மமும்
பிழை நேர்ந்தால் நலம்குலைந்து கிடந்திடுமே இவ்விரண்டும்

எவ்வகையால் உயர்ந்தோர்க்கும் நீரின்றி வாழ்வில்லை
ஒல்வகையான் பொய்த்திடினும் தாழ்வின்றி வேறில்லை

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

வாசிப்பு கலாச்சாரம்
சிந்தனை முன்னேற்றம்

நூலகங்களைக் கால் தொட்டு
நூல்கள் கரம் பட்டு
நேரங்கள் தனியாய் ஒதுக்கி
நேர்த்தியாய் ஆசனங்கள் கொண்டு
இறாக்கைகள் களைத்து நூல்கள் தேடி
நாள்பட்ட நூல்களின் வாசங்கள் நுகர்ந்து
வாசிப்பின் வாசம் வரவேற்றதெல்லாமோ
தனி நினைவு இன்று.

அறிவுக்கு விருந்தாகி
அறிஞனுக்கு உரமூட்டி
அறியாமையிலே வெளிச்சமாகி
அச்சத்திற்கு அர்த்தம் காட்டி
தனிமைக்கு துணையாகி
காத்திருப்பிலே நண்பனாகி
சிந்தனைக்கு சிறகு தந்து
புதுமைக்கு காரணமானது வாசிப்பு



புத்தாக்கம் தரை தொடவே
புதியதாய் உதயமானது இணையம்
கற்றலுக்கும் கவிஞனுக்கும்
எழுதுமுனைகள் இல்லா எழுது பலகை தந்து
கை பட்ட சஞ்சிகைக்கும் பத்திரிகைகளுக்கும்
இலத்திரனியல் வடிவம் தந்து
வாசகனின் வரையறைகள் களைந்து
இலத்திரனியல் வாசிகசாலை தந்து
வாசிப்பின் வாசனையை நித்தம்
கைபேசியிலேயே நுகர வைக்கிறது இணையம்.

வாசிப்பு தந்த மாற்றமானாலும்
வாசிப்பிலே வந்த மாற்றமே இது
புவியிலே என்றும் தீராத மண்வாசனையாய்
புதுமைகளுடனும் புதுப்பயணம்
தொடர்கிறது வாசிப்பு.

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# இசை

காற்றின்வழி வரும் ஓசையது
காதின் வழியே அசை போடுமது
தனியே மொழியென்று ஏது அதற்கு?
இசை என்பதே தனி மொழிதான்

இசைக்கருவிகள் ஒவ்வொன்றும் இசைமொழிதனிலே
இயற்றிடுதே இசைக்கவிதை தன்வழிதனிலே
கருவிகளும் போட்டி போட்டு தத்தம் கவிகளை - சிட்டு
குருவியென ஒற்றுமையாய் சேர்ந்தே இசைத்திட
அருவியென ஊற்றிடுதே இசைக்கோர்வை எனும் கவிதை



இயற்றிய வரிகள் கானமாகிட
இசையெனும் பள்ளியில் மாணவனாய் போய்ச்சேர்ந்திட
மேடுபள்ளம் பாராமல் இசைந்தோடும் நதிபோலே
இனிமையாய் பிறக்கிறது பாட்டெனும் இசை நாட்டியம்

இசை கேட்டு மயங்காதோர் யாருமில்லை இவ்வுலகில்
நல்இசை கேட்க மறுப்பவர்க்கு இனிமையில்லை இவ்வுலகில்
வசை பாடும் வாய்கள் கூட இசை கேட்டால் அமைதியாகும்
திசை எட்டும் பரவட்டும் இசை என்னும் இனிய மொழி

கவிஞர் ஜோதிமணி, தாராபுரம்

# வெற்றியை உனதாக்கு



இருளைக்கிழித்து வெளிச்ச வெள்ளையடி
இதயங்களை தைத்து மனங்களில் குடியேறு
இறைவனை நினைத்து வெற்றிகளை உனதாக்கு
இல்லாதோருக்கு இருப்பதை பகிர்ந்தே வாழு

வெற்றியின் உச்சத்தின் படியில் தவழ்ந்திட
சிகரங்களின் முகட்டில் கொடி கட்டு
வா விரைந்து ஒடி வா
வெளிச்சம் காண எழுந்து வா

உதயம் தேடி ஒடி வா
தடைகளை தகர்த்தே வீறுகொண்டுவா
அதிகாலை ஆதவன் துவளாமல் வானிலே
அதிகாரத்தோடே எழுந்து வருவதை காணவா

அஸ்தமன சூரியனும் நாளை உதயம்
நம்பிக்கையில் இருளில் விழுவதைப் பார்
உன்னால் மட்டுமே விடியல் மலரட்டுமே
உதயங்கள் உன்னிடம் தேசியகீதம் பாடட்டுமே

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# இவர்கள் யார்?



எனக்கு பேச முடியும்
ஆனால் உண்மையை கூற விட மாட்டார்கள்

உணர்வினை வெளிப்படுத்த முடியும்
ஆனால் வெளிப்படுத்த எனக்கு
உரிமை தர மறுக்கிறார்கள்.

சிந்திக்க முடியும் செயலில்
காட்ட முடிவதில்லை

குறைகளை கூறி விட முடியும்
ஆனால் என் குறை கூறி
வாய் அடைத்து விடுவார்கள்.

கொடுத்த கடனை கேட்டால்
என்னையே பகைத்து விடுவார்கள்
உதவிகள் கேட்காமலே செய்திடுவேன்
ஆனால் அதை நொடிப் பொழுதில்
மறந்து விடுவார்கள்.

காயங்கள் பல தருவார்கள்
வலிகளைக் கடந்து வருவேன்
பலி சொற்களை என் காதுகளில்
கேட்க முடிவதில்லை
இருந்தும் அதை நான் தாங்கிக் கொள்கிறேன்.

நான் துயருற்று இருக்கின்றேன்
அவர்கள் மகிழ்வுடன் உறங்கின்றார்கள்.
நான் அறிய தவறியது உலகையா?
இல்லை சக மனித குலத்தையா?

யார் இவர்கள்?

கல் நெஞ்சம் படைத்தவர்களா
உண்மை புரியவில்லையே
இருந்தும் வாயடைத்து வாழ்கின்றேன்
யார் இவர்கள் என்று தெரியாமலே

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

# ஜன்னலோர இருக்கை

தந்தை விரல் விட்டால்
தொலைந்து விடுவோம் என்று
பயந்த நான் தான்
தனியான பேருந்து பயணத்தில்
ஜன்னலோர இருக்கை
கிடைக்காத எனுமளவிற்கு
மாறி விட்டேன்
மாற்றி விட்டவர்களுக்கு
மிக்க நன்றி.



கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# பயணம்

வாழ்க்கை பயணம் வசதியாய் விளங்கி
சூழும் நினைவாய் சுரந்து வந்திடுமே
தொலைதூர நிகழ்வும் தொல்லையென நினைத்தால்
இலைமேல் நீராய் இன்முகம் மறைக்குமே

காலமும் போற்றும் காவலாய் நின்றே
பாலமும் அமைத்து பண்பில் உயர்த்துமே
தூரத்து உறவும் துணையாய் அமைந்தே
பாரமும் போக்கும் பண்பில் வளர்ந்தே

சங்கடம் சுமக்கும் சலிப்பில்லா உள்ளமாய்
தங்கிடும் நிழலாய் தவழுமே உலகில்
உறவுகள் வளர்க்கும் உவகை பொங்கியே
நிறைந்த மனமாய் நிலைக்குமே சொல்லில்

திறந்த சிந்தை திரட்சி கொண்டே
பறந்த கடலாய் பாசமாய் உயர்ந்ததே
சுடரும் ஒளியாய் சுட்டிக் காட்டியே
படரும் விதமாய் பகலென திகழுமே

குடும்பமாய் சென்றால் குவலயம் சிறந்தே
தொடுக்கும் பலமான தொன்மை வழியாய்
பல்வித வளமும் பகுத்து பெருக்கி
இல்லாமை நீக்கும் இன்னிசை கீதமாய்

உண்மையாய் வளர்ந்த உண்மை உறவுமே
வெண்மையான இதயமாய் வென்று வளர்க்குமே
கடமையை வளர்த்து கணிசமான கடனாய்
திடமான வளர்ச்சியை திரண்டே தந்திடுமே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்



விழித்தால் கண்ணீரோடு போராட்டமே.
உறங்கினால் கனவோடு தொல்லை.
நடக்காதவற்றை எண்ணியே நிகழ்கால
நேரங்கள் மறைந்து போகிறதே.
ஒவ்வொரு நாளின் முடிவும் ஏமாற்றமே.
சிறிய சிறிய விடயங்களை
நினைத்து மகிழ்ச்சியை கொண்டாடுகிறாளே.
நமக்கானது நம்மை தேடி வரும்
என்ற நம்பிக்கையை இழக்காதே.
உனக்கான நேரம் வரை
மனதை தளர விடாமல் காத்திரு.
நடப்பதை ஏற்க பழகி கொண்டால்
வாழ்க்கை சுலபமாக மாறிவிடுமே.
நீ கையாலும் முறையில் தான்
உனது மன பக்குவம் வெளிப்படுகிறது.
நீ நீயாக இருந்தால்
எல்லாம் உன் கைவண்ணமே.

கவிஞர் மோனிஷா

# அடல் காண வா

வளமையாய் நடக்கும் திருவிழாவிற்கு
புதிதாய்ப் பொட்டு வைத்து
வரவேற்புக் கம்பளம் விரிக்க
சன்னலோரம் சிறகடித்த
என்னிதயச் சிட்டு
சலங்கை கட்டி ஆரம்பிக்கிறாய்
வீம்புக்கு விதிகளை மாற்றிச் சொல்லி -
என் வீரத்தைச் சீண்டிப் பார்க்க.

முட்டி மோதி தட்டுத் தடுமாறி
எதிரணியின் இலக்கங்களை
எனதணி எட்ட முடியாத போதெல்லாம்
உனது வேல்வழி அம்பால் என்னைச் சாய்த்து
கன்னம் சிவக்கிறாய்.



தனித்து விடப்பட்ட நான்
கபடி விளையாட அடலேராய்ப் புறப்பட்டு
ஏறுகோடு ஏறி எதிரணி வீரர்களை வீழ்த்தி
வெற்றி இலக்கங்களை நான் அதிகரித்தபோது
எதிரணியின் இதயத்துடிப்பை விட
உன் இமைகளின் துடிப்பு
நங்கூரமாய் நாட்டியமாடிய வேளையில்
வெற்றிப் பேரொளி என் மீது படர்கிறது!
கக்கத்தில் இடுக்கிய வெட்கத்தைச்
சூடிக்கொண்டு மின்னலாய் புறப்பட்டவள்
இதயத்தை எடுத்துப் போக மறந்து விட்டாய்.

அடல் காண வந்தவளின் தொலைத்த இதயம்
பக்தனிடம் பாதுகாப்பாய் .
இதயத்தோடு வெற்றியும் இருப்பதை
அவளிடம் சொல்ல
தூதுபோ செல்லக்கிளியே.

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# கலைகள்

ஒரு போர் மறவனின்
வாள் ஏந்திய ஓவியம்
காண்போரை எழுச்சி
கொள்ள செய்யும்!

ஒரு கலைப்படம்
வீரத்தையும்
வரலாற்றையும்
நம் நெஞ்சில் விதைக்கும்!

ஒரு கூத்து கலைஞனின்
அடவுகள் அபிநயங்கள்
நம்மை பல யுகங்களுக்கு
அழைத்து செல்லும்!

கவிதைகளின்
அசையும் சீரும்
நம்மை அப்படியே
அசைத்துப் பார்க்கும்!

ஒரு கம்பீர குரலில்
ஒலிக்கும் பாடல்
நம்நாடி நரம்புகளை
முழுவதுமாக சூடேற்றும்!

ஒரு சிற்பியின் சிலை
நம் சிந்தனைகளை
பலவாறு திசை திருப்பும்!

ஒரு கதை சொல்லியின்
கதையாடல் நன்மையும்
தீமையும் உணர வைக்கும்!



பறையொலி
நம்மை லயத்தோடு
ஆட வைக்கும்!

சங்கின் முழக்கம்
நம் உறக்கத்தை
தெளியவைத்து
விழித்தெழ செய்யும்!

எந்த கலையும்
பொழுது போக்க
பிறந்தவை அல்ல
நம் பழுது நீக்க
உதித்தவை!

கவிஞர் கவி. சுகரத்னம், (இரா. தியாகராசன்)

# அவளின் அவன்



அவள் பெயர் கூட அறியாமல்
அவள் முகம் அறிந்த நான்
அன்று முதல் இன்று வரை
அவளை நாடி அவளைத் தேடி அறிந்தேன்
என் கண்ணோட்டத்தில் என் கண்மணி என்று
என்னவளை
பெண்ணே இதோ எந்தன் பாவை
உன்னை நோக்கி  அன்று பார்த்த முகம்
ஏனோ இன்று வரை
இரவும் பகலும் இரக்கம் இல்லாமல்
நோயுற்று
அவனும் அகிலம் அறியாமல்
குருதி  சிந்துவதை சிந்தனை செய்யாமல்
தினம் அவளின் கண்ணோட்டத்தை
தன்  கண்ணீரின் ஓரமாய்
காவிய ஓவிய பின்னணியில் தன் கனவுகளில்
தெளிந்த கண்ணீர் அந்நொடி கலங்கியது
அவனின் கரங்களால் கண்மணியின்
காதல் நாடி
அரிய தினம் தினம் அவள் பார்க்கும் புலனத்தில்
அவளை மட்டும் பார்க்க புலனாய்வு இழந்து அவன்
புண் படுகிறான் பார்த்தாலும் அவள் பார்க்காவிட்டாலும்
பசுமை இழந்த வறண்ட நிலமாய் அவன் தேகம்
ஆனால் அவளோ தேநீர் பருகுகிறாள் அவனின் கண்களில்
படாமல் நெடுந்தூரத் தோட்டத்தில் அவள் அங்கே
இவன் எங்கே என்னும் மாய பிம்பத்தில்
இவன் மயக்க துன்பத்தில் இன்பம் எங்கே
அதைத் தீர்க்க நீ இங்கே என் கண்மணியே
நீ எங்கே என்று கனவு பின்னணியில் தினம் களவு போகிறான்
கலை இழந்த தமிழ் மகன் கண்மணியின் காதல் அவன்!

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

நீ வெட்கப்பட்டதன் அழகை கண்டு
என் ஆதி முதல் அந்தம்வரை
அனைத்தும் வெட்கப்பட்டது
நான் வெட்கப்பட்டதன் அழகை கண்டு
அந்த வெட்கத்திற்கும் வெட்கம் வந்தது



கவிஞர் புன்னகை தீரன் இரா. சங்கர், ஈரோடு

# என் விடுதலை உன் மடியில்

ஆறுதலும் உன் மடியில்
என் அழுகையும் உன் மடியில்
இரவுகளும் உன் மடியில்
என் விடியல்களும் உன் மடியில்
நான் விரும்பும் மரணம்
உன் மடியில் நிகழ்ந்தால்
சொர்க்கம் தேவை இல்லை
இந்த நரகத்தில் இருந்து
விடுதலை கொடு.




கவிஞர் க. வீரபாண்டி, புளியங்குளம், மதுரை

# பிழை

காட்சிப் பிழையால்!
கருத்தொருமிக்கத் தவறியதால்,
மயங்கி, முயங்கி நீங்கிட!
தெளிந்தபின் இயற்கையால்
சிக்கிக் கொண்ட பிழையிது!
கரிக்கோல் கொண்டு
காகிதத்தில் எழுதிய
எழுத்தில்லை இதை
அழிப்பான் கொண்டு அழித்துவிட!
கருங்கல்லில் வடித்தப்
பெயரைப் போல
கண்ணெதிரே சாட்சியாய்!
காதலின் விளைவென்று
கன்னியவள் நினைத்திருக்க!
காமத்தால் நேர்ந்த பிழையென
காளையவன் முகம் திருப்ப!
கையறு நிலையில்
மங்கையவள் கண்ணீர் சிந்த!
பூத்திருந்த பூ வாட!
வாழ்வில் வடுவாய்
நின்றிடுவேனோ?
உள்ளுக்குள் மறுகி,குறுகி!
நீ சிந்தும் கண்ணீர்
எனக்குத் தெரியும்! ஆனால்
என் துடிப்பு, என் வேதனை
அறியமாட்டாய் நீ!
வெறும் சதைபிண்டம் தானென்று
எண்ணி விடாதே!
மூச்சு உண்டு, புரிதல் உண்டு
வலியும், ரணமும் எனக்குண்டு!
உயிரைக் கொடுத்து
உதிரம் பெருக்கி



பிழையைப் பொறுத்து
வடிவம் கொடு!
உயிர்ப்பிச்சை கொடு!
உன் வாழ்க்கை, உன் உயிர்ப்பு
சரி செய்திட முடியாப் பிழை
என்று எதுவும் இல்லை இங்கே!
உன் நம்பிக்கையை
ஊன்றுகோலாய்ப் பற்றி
எழுந்திடு! நிமிர்ந்திடு!
பிழையெல்லாம் பஞ்சாய்
பறந்து போகும்!
துணையாய் நான் வருவேன்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# நழுவி நழுவிய மனம்

அவளின் சந்திப்பில்
சற்றே மனம் படபடப்பில்
புரியாத திசையின்
பயணம் போல்

அதே புன்னகை
சிநேகமான பார்வையில்
கைகளில் ஏந்திய
காபி கோப்பையும்
வெப்பம் தனித்தது

குறையாத பேச்சில்
மனம் சிறகின்றி சற்றே
முதல் காதலின் முகவரியல்லவோ

விகல்பம் இல்லாத
விழிகளின் சஞ்சாரங்கள்
தொலைந்ததா தொலைத்தோமா
ஆராய மனமில்லை

முற்றுபுள்ளியிலயே
இருக்கட்டும்
முகவரி வேண்டாமென
முடிவுக்குள் நான்
தொடருமா என்றால்
தெரியாது

காதலின் சுவடா
நட்பின் அழைப்பா
புன்னகை மட்டும் பரிசாய்
நழுவியது ஏதோ ஒன்று



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டிணம்

# நிழலின் அருமை



உச்சிவெயில் கொளுத்த
உச்சியும் காயுதடா
பச்சையா இருந்தது
பாழாய்ப் போனதடா
மிச்சமின்றி வியர்வையில்
மூழ்கிப் போனேனடா
எச்சிலும் ஊறாது
ஏகத்துக்கும் விக்கலடா

வளர்ச்சியெனும் பெயரிலே
வெட்டப்பட்ட மரங்களடா
தளர்ந்த மனிதனுமொதுங்க
துளிர்த்த மரமெங்கடா
நிழலைத் தேடி
நித்தம் அலைந்தேன்
நிழலின் அருமை
நொடியில் உணர்ந்தேன்

மரங்கள் விதைக்கும்
மாண்பைக் கற்றேன்
வரமாய் நிழலை
வழங்கிடக் கண்டேன்
வெம்மையின் கொடுமையில்
விலகியே நின்றேன்
எம்மைக் காக்கும்
அன்னையாய் மரநிழலே

நிழலின் அருமை
நித்தமும் உணர்வீர்
தழலைத் தணிக்கும்
தகைமையாம் மரம்
மரங்கள் விதைத்து
மானுடம் வளர்ப்பீர்
வரமாய் நிழலை
விரும்பி பெறுவீர்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# நிலைத்திடாத உறவு



உடன் பிறப்பாய் வந்தவனே
என்னுயிரில் கலந்தவனே!

என்றும் என்னுடன் இருந்திடுவாய்
என்று எண்ணி இருந்தேன்!

கை கோர்த்து நடந்தவன்
காலம் முழுதும் கை தூக்கி விடுவாய்
என்று நினைத்திருந்தேன்!

சிறு வயதிலேயே
சிங்காரமாய் நடந்திடுவாய்
சகோதரப் பாசமதில்
கட்டுண்டேன் நானுமே!

வீட்டுப் பொறுப்புகளை
நீ தோளில் தாங்கி
எங்களைக் காத்திடுவாய் என்று
பெற்றோர் ஏங்கிட!

சிறு வயதிலும்
கண்ணுக்கு கண்ணாய் வைத்து
எங்களை கண் இமைபோல் காத்தவனே!

காலனுக்கும்
உன்னை மிகவும் பிடித்திட்டதோ
உடன் அழைத்துக் கொண்டானே!

அன்பு அண்ணா!
ஒன்று புரிந்தது இன்று

நீ இல்லா வாழ்வு
நம் குடும்பத்தில்
அனைவருக்கும் பேரிழப்பே!

நிலைத்திடாத உறவை எண்ணி
மருகுகிறேன் உந்தன் பிரிவாலே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

மிகையினும் விஞ்சிய பாசம்
மிகையினும் விஞ்சிய நம்பிக்கை
மிகையினும் விஞ்சிய அக்கறை
இறுதியில் கற்றுக்கொடுத்தது
ஒன்றுதான்
மிகையினும் விஞ்சிய வலியினை
பரிசளித்தே செல்லும்
நிகர் வலியின்றி
அதுவே இறுதியில் வெல்லும்



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# மனிதனும் தெய்வமாகலாம்

மானிட பிறப்பே மகத்துவமாம்
நம் புண்ணிய பூமியில் இருந்திடுமாம்
கடைசி பிறப்பே மானிடமாம்!

மகான்கள் பலரும் தோன்றியராம்
இன்றும் மக்களிடையே தெய்வமாகி
போற்றப்படுகின்றனரே!

மற்ற உயிர்களை இம்சித்து வாழ்தல்
மனிதப் பிறவி அல்லவன்றோ
எல்லா மதமும் போதிப்பது அன்பை மட்டுமே!
அன்புடையார் எல்லாம் உடையார் என்றாரே வள்ளுவர்.
நற்செயல்கள் பல புரிந்து
வாழ்வாங்கு வாழ்வோமாக!




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# விழியில் விழித்திருக்கும் விண்மீன்!

ஓடும் பாதை அறியாமலே
ஓடும் கால்கள்
ஓடுவதெங்கே மனம் போலவே
ஓயாமலே!

அடிவானம் அறிய அலைந்தாலும்
அகம் காணுமோ
அறியாமையில் மழலை போலவே
அழுகின்றதே!

தன்னிலை அறிந்தே தவிப்போடே
தாகமாய் தடையின்றியே
தன்னிலை மறந்தது போலவே
தள்ளாடுதே!

இருளோடு ஒளியாக உன்னோடே
இருந்தும் இல்லாமலே
இருளின் கதிரவன் போலவே
இருக்கிறேனே!

காயங்கள் மட்டுமே நெஞ்சிலே
காய்ந்த சருகாகவே
காயாத இரணங்கள் போலவே
காத்திருக்குதே!

பிரிவு என்பதே இல்லாமலே
பிரித்தாலும் சூழ்ச்சியிலே
பிளவாத அணுவைப் போலவே
பிரியாதிருக்கனுமே!



எட்டிய தூரம் நீயில்லையே
எண்ணங்கள் உன்னோடே
எண்ணுவாயா உன்னுயிர் போலவே
என்னையுமே!

விழிகளில் விழுந்த விருட்சமே;
விதையின்றி என்னிலே
விண்மீன் திரள் போலவே;
விழித்திருக்குதே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# ஒற்றுமையின் சிகரம்

பாரதம் என்னும் பேரு
இங்கு பாகுபாடு என்பது ஏது?

பலமொழி பேசும் மக்கள்
ஆனாலும் இல்லை இங்கு சிக்கல்.

மதங்கள் வேறு வேறு
ஆனாலும் மதம் பிடிக்காத நேசம்.

ஒன்றுபட்ட பாரதம் "ஒற்றுமையின் சிகரம்"
தேசம் காக்கும் போரிலே
இன்னுயிர் தந்திட்ட தியாகிகள்.



லட்சோப லட்சம் வீரர்கள்
அணி திறந்திட்ட அதிசயம்
தியாகத்தில் பிறந்த பாரதம்.

புத்தன் இயேசு காந்தி போல்
கருணை இறக்கம் நிறைந்திட்ட
அன்பு கொண்ட மனிதர்கள்.

மனிதம் போற்றும்
புனிதர்கள் தோன்றிட்ட தேசமே
எங்களின் புகழ் மிக்க பாரதமே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# நட்பு

கனவுகள் கரைந்தாலும்
கரையாத
உயிர்பில்லா
உணர்வுகளின் நிழல்
நம் அன்பின் சாயல்

பிரியாத பொழுதுகளும்
பிரியங்களின்
பிரேமம் ஆனதே

சிதறும் நீர் துளியாக
உதிரும்
நீண்ட நாள் காணாத
அன்பின் துளிகள்
சாரலாக
நம்மின் அன்பு
ஆன்மவில் கலந்த
நட்பின் வாசம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்


# எது யார் யார் கையில்?

விதியை நொந்த படி
ஈசனை நாடி பல படி ஏறி
மலைக் கோட்டைக்கு வரும் பக்தர்கள் ஆயிரம்
அவரவர் வேண்டுதல் பல்லாயிரம்

நமக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்த பார்த்து நிம்மதி நாடி
இறைவனை இறைந்து
துன்பமெல்லாம் கரைந்து

அவரவர் ஆங்காங்கே சற்றே இளைப்பாறி
மனக்குறை ஒருவர்க்கொருவர் ஆற்றி
அயரந்திருந்த வேளையில்
அடியார்க்கு அடியார் இராமபிரான் சீடர்கள்

ஈசனின் திருத்தலத்தில் இராமபிரான் சீடர்கள்
அதுசரி அவர்கள் எங்கும் இருப்பார்கள்
அது இராமனின் நாதனின் ஆலயம்
கிளைகளிலும் மரங்களிலும் தாவி
நம்மை கதிகலங்க வைப்பார்கள்



நம் கையில் இருப்பதை
பறித்து விளையாடுவதில் ஆனந்தம்
ஆண்டவனைப் போலவே
அலகிலா விளையாட்டு ஆர்வம்
பழத்தை! பர்சை! பறிகொடுத்தவர்
விழிபிதுங்கி நிற்பது பரிதாபம்

கண்ணிமைக்கும் நேரத்தில்
ஒருவரின் அலைபேசி அவர் கையில்
அவர் போட்ட கூச்சலில்
மொத்த கூட்டமும் அதன் கவனத்தில்
தொடு திரையில் விளையாட ஆரம்பித்து விட்டார்!
உற்சாகம் மேலிட! பறிகொடுத்தவர் நிலை பரிதாபம்!

திடிரென அலைபேசிக்கு அழைப்பு வர
தொடு திரையை தொட
எதிர் முனையில் என்ன சம்பாஷனையோ?
அவருடன் பேச இவருக்கு விருப்பமில்லை போலும்
விசிறி எறிந்து விட்டு நடையை கட்டி விட்டார்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# மாயவலைகள்!

மாயமானை மெய்மானென நம்பினாள் சீதை!
ஆய்ந்தறியா காரணத்தால் அவதியுற்ற கதையறிவோம்!
பொய்யும் புரட்டும் நிறைந்த உலகமிது!
பொய்யை மெய்போல் நம்பவைக்கும் உலகமிது!
ஏய்ப்போர்கள்,, ஏமாற்றுப் பேர்வழிகள் வலைவிரிப்பர்!
மெய்ப்பொருள் காண்பதே அறிவென்றார் வள்ளுவரும்!
இணைய உலகினிலே எண்ணற்ற வலைகளுண்டு!
வலைவீசிக் காத்திருக்கும் வஞ்சகர்கள் அதிகமுண்டு!
அளவிலா பேராசை கொண்டவர்கள் வீழ்வதுண்டு!
இளைஞர்களின் பாதைமாற்றும் எத்தனையோ காரணிகள்!
கல்விகற்கும் சிறுவர்களின் பாதைமாற்றும் கைபேசி!
இணைய உலகினில் முகமறியா மனிதர்களுடன்
இணைகின்றோம்! பொன்னான நேரத்தை வீணாக்குகின்றோமே!
இல்லங்களில் உள்ளோர்கள் தனித்தனி தீவுகளாய்!
உண்மைக் காதல்போல் உனைவீழ்த்த காமவலை!
நன்மை செய்வதாய் நம்பவைத்துக் கழுத்தறுக்கும்
பசுத்தோல் போர்த்திய புலிகள் பலவுண்டு!
வசியப் படாமல் மாயவலைகளைத் தகர்த்தெறி!
சாதி,மத பேதங்களால் மாய்கின்ற காதலர்கள்!
சதித்திட்டம் தீட்டுவோரை இனங்கண்டு புறந்தள்ள
எதிர்வரும் துன்பங்கள் இல்லாமல் போய்விடுமே!
மதியின் துணைகொண்டு மாயங்களை உணர்ந்திடு!
உதித்திடும் நல்லெண்ணம்! உண்டாகும் நல்லுயர்வும்!
இதுதான் நற்பாதை என்பதும் புலப்படுமே!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

(அழகியசிங்கரின் என்பாவாக)
இன்றைய என் பா
************

விட்டு, விட்டு ஒடுவது
விடுதலை அல்ல!

விலகி செல்வதும்
விடுதலை அல்ல

உறுதியாய் நின்று,
சுயமாய்,தன்போக்கில்,

வீரமாய் போராடுவதே
விடுதலை.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

காடுகள் தாங்கிய நிலங்கள்
இன்று கட்டிட கல்லறைகளின்
காலடியில் மூச்சுத்திணறலாய்

காடுகளின் வரைபடத்தில்
அரசியல் கறைகள்
அசிங்கத்தின் கிழிசல்களாய்

சொகுசு விடுதிகளின் குறை
பிரசவத்தால் இன்று இயற்கை
அன்னை மலடியாய்

ஆதி மனிதன் கொண்டாடிய
காடுகள் அரசியல் அலட்சியத்தில்
தொலையும் எதிர்காலங்களாய்

மனிதனின் நில வெறியில்
வன விலங்குகள் வீடுகள்
முன்னே பயங்களாய்


மரங்கள் நிறைந்த காடுகள்
நாளைய தலைமுறைக்கு
இணையத்தின் பதிவுகளாய்

வெட்டப்படும் மரங்களின்
வியர்வை துளிகள் நாளைய
உலகின் தண்ணீர் தாகமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

என் மனதை
அகழ்வாராய்ச்சி
செய்தபோதுதான் தெரிந்தது,
என் மனதின்
புதை பொருளாக
உன்னுடைய
நினைவலைகள்
மட்டுமே.



கவிஞர் ஜெ. சுரேகா, திண்டுக்கல்

நித்திரையில் மட்டும் வந்த கனவல்ல
நிஜத்திலும் நிலையாய் தொடரும் கனவே
கானலான காதல் உணர்வு.

வெறுமனே உணர்வல்ல
மகிழ்வாயிருப்பவனை சோர்வாகவும்
சோர்வாயிருப்பவனை மகிழ்வாகவும்
ஒரு நொடிக்குள் மாற்றிடும்
மாயாஜாலம் நிறைந்த கனவு அது.

கண்களின் இமைகளை திறக்கும்
ஒவ்வொரு வினாடியிலும்
காலத்தையே நிற்க வைத்திடும் அற்புதமது.

வார்த்தைகள் பறிமாறாமலே
ஆயிரம் அர்த்தங்களை உணர்த்திடும்
மௌன மொழி அது.

பூக்கள் பூக்கும் தருணங்களும்
புயல் வீசும் தருணங்களும்
மழையும் வெயிலும் போல
தொடராய் நிகழ்ந்திடும்.

இதமான நதியாய் இருக்கலாம்
எப்போது வெள்ளமாய்
மாறுமென கூற முடியுமா ?

அது போன்றே காதல் என்ற நதி
எப்போது கானலாகும்
அதன் முடிவு நிஜமா ?கானலா ?
யார் அறிவர்

நிஜமும் நிழலும் ஒன்றாய்
பின்னிப் பிணைந்த மௌன ராகம் அது



சில சமயம் வானவில்லாய்
சில சமயம் கருமேகமாய்
நம் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும்

விடையறியா விடியலாய்
அது விதியின் கரங்களில் தங்கியிருக்கிறது.

நிஜத்தில் கானலானாலும்
நினைவில் நிஜமாய்
காதல் என்ற நதி மனதில்
என்றும் நிலைத்திருக்கும்
நீடித்திடும் நினைவலைகளாய்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, அக்குறணை

# எழுத்தின் வலிமை

தொல்காப்பியரின் எழுத்து இலக்கணமானது
வள்ளுவரின் எழுத்து பொதுமறையானது
இளங்கோவின் எழுத்து காப்பியமானது
கம்பரின் எழுத்து காவியமானது
ரவிவர்மனின் எழுத்து ஓவியமானது
பெரியாரின் எழுத்து பெண்ணுக்கு மேன்மையும் ஆனது
பாரதியின் எழுத்து சுதந்திரத் தாகத்தைத் தந்தது
பாவேந்திரன் எழுத்து தமிழ்மீது மோகத்தைத் தந்தது
காந்திஜியின் எழுத்து அகிம்சையைத் தந்தது
நேதாஜியின் எழுத்து புரட்சியைத் தந்தது
காமராஜரின் எழுத்து பாடமானது
கண்ணதாசனின் எழுத்து பாடலானது
அம்பேத்கரின் எழுத்து சட்டமானது
கலைஞரின் எழுத்து திட்டமானது
மாணவர்களின் எழுத்து பட்டமானது.



கவிஞர் தி. அருள் ஞானப்பிரகாசம், சேத்தியாத்தோப்பு



வெற்றிக்கான காரணங்களைவிட
தோல்விக்கான காரணங்களுக்கான
யோசிப்பும்
கிடைத்தற்கான
சந்தோஷத்தின் அளவைவிட
இழப்புக்கான சோகத்தின்
அளவும்

தன்னிடமுள்ளவற்றுக்கான
திருப்தியின் கணக்கைவிட
பிறரிடம் இருப்பது பார்த்து வரும்
ஏக்கக்கணக்கு அதிகம்

மனித மனங்களில்.

*****

யார்சொன்னது?

உன்னால் முடியும்என்ற
வார்த்தையில்
உள்ளத்தின் நம்பிக்கை

அற்புதமான
சிறப்பான பணி
என்ற சொற்களில்
வானத்தில் பறக்கும்
மனது

இப்படி எல்லாமா
சொதப்புவே
என்ற பேச்சில்
நொறுங்கிப்போகும்
உள்ளம்

காலத்தே செய்த உதவிக்கு
நீ நல்லா இருப்பே
என்ற வாழ்த்தில்
நெகிழும் மனது

யார் சொன்னது?
காற்றில் கரைபவன
வார்த்தைகள் என்று

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை



ரேகை தேய உழைத்தவன்
வாகை சூட
முடியவில்லை
***

குழந்தைகள்
தூங்கும் போதும்
சிரிக்க மறப்பதில்லை
***

என்னுடைய கெட்ட பழக்கம்
நல்ல பழக்கங்களை
அடிக்கடி பட்டியலிடுவதே
***

இறுக கையை மூடினால்
கோபம் அடங்கிவிடுகிறது
சினிமாக்களில்
***

கண்கள் காதலின் விளைநிலம்
என்றால்
புருவங்கள் வரப்பு
***

மூத்திர தாளம்
போடும்
குழந்தைகள் அழகு
***

எல்லா நாட்டு குழந்தைகளுக்கும்
பேச்சு வரும் வரை
ஒரே தாய் மொழி தான்
***

சண்டைக்கும் பிரிவிற்கும்
சம்பந்தமில்லை
காதல் பார்முலா
***

முருகன் காலண்டர் வந்த உடன்
புது வருடம் தொடங்கி விட்டது
அம்மாவிற்கு
***

முட்டாள் தனங்களில்
இதுதான் முதன்மை
நான் புத்திசாலி என்பது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# மழைக்கால நிலவு

ஒரு துளி மழைத்துளி
பதம் பார்த்தது மண்ணில்

சிறுகாம்பின் புல்நுனி
ஸ்பரிசம் கொண்டது மெல்ல

வெள்ளிக்கம்பியின் நூலிழை
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில்

மழைக்கால நிலவு தன்னில்
வாசம் கொண்டது ஈரமண்ணில்

ஜன்னலோர நிலவு தரிசனம்
நாளும் சொன்னது ஒரு துளிப்பா

ஆரம்பப் பள்ளிப் பருவத்தில்
மழைநீரில் காகிதக் கப்பல் விட்டது
வானத்து நிலவிடம் சென்று
வாங்கி வா பட்டம் என்றது

அந்திமாலை முன்னிருட்டில்
பௌர்ணமி நிலவின் தரிசனம்
என்றும் இளமைக்கால ஒளிக்கீற்று

மழைக்கால நிலவினைத் தேடி
அனுதினமாய் ரசிக்கிறேன்
ரசித்து ரசித்து வியக்கிறேன்

நிலவின் மடியில் ஒரு துளி - அது
மழைக்கால நிலவின் பனித்துளி



கவிஞர் மு செந்தூர்கனி, முத்துகிருஷ்ணாபுரம் (தூத்துக்குடி)

# விநோத வரம்

காதலால்
பூத்திட்ட காதலிக்கு
இமைகள் படபடக்கும்
அழகிய புருவமீதில்
இதழ் முத்தம்
பதித்திட்டான்
சற்றே அனுமதித்து
தள்ளிவிட்டாள்
அதற்குள் திகட்டியதா?!
அப்பாவியாக கேட்டவனிடம்
இல்லை இல்லை
மீண்டும் இதழ் பதிக்க
சற்றேனும் இடைவெளி
வேண்டாமா ? என்றாள்
நாள் முழுக்க
இப்படியே
மூழ்கித் திளைத்திட
வரம் தருவாயா? என்றான்
வரம் தர நான்
என்னுள் இல்லையே என்றாள்!
உன்னுள்ளிருக்கும்
என்னிடம்
நீயே பெற்றுக்கொள் என்றாள்
சின்ன சிணுங்களுடன்!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# தன் முனையில் தமிழ் மொழியின் சிறப்பு




தம்பிரான் வணக்கம்
தமிழில் முதல் அச்சு நூலாகும்
பாரதம் மொழிகளில்
முதல் நூலும் அதுவாகும்
##
இலக்கியம் கண்டு
இலக்கணம் இயம்புதலாகும்
தொல்காப்பியம் தமிழனின்
தொன்மை இலக்கண நூலாகும்
##
பதினெண் மேற்கணக்கு
முச்சங்கம் தந்ததுவாம்
அகமும் புறமும்
இலக்கிய பொருள் மரபாம்
##
மக்களின் குறைதீர்த்து
மூவேந்தர் ஆண்டனர்
ஈராயிரம் கடந்தாலும்
அவர் புகழ் போற்றுகிறோம்
##
திணைப் புலத்திலும் தமிழன்
திணை வகுத்து வாழ்ந்தான்
முதல் கரு உரி
சங்க தமிழனின் தனித்துவமாம்
##
கீழ்க்கணக்கு நூல்களில்
அகம் புறம் அறமுமானதாம்
வள்ளுவரும் இளங்கோவும்
நற்றமிழ் இயற்றினராம்
##
பல்லவர் காலத்தில்
பக்தி இலக்கியம் பெருகியதாம்
நாயனாரும் ஆழ்வாரும்
நாவினிக்க தமிழ்ப் பாடினாராம்
##
பேரிலக்கியம் சிற்றிலக்கியம்
தமிழ் மொழியின் சிறப்பாம்
காப்பியம் பாடிட
கம்பரை விஞ்சிட முடியுமா?
##
வெண்பாவும் ஆசிரியப்பாவும்
கலியும் வஞ்சியும பாவினமே
புதியன புகுந்தாலும்
பழமையைப் போற்றிடுவோம்
##
தொன்மையும் இலக்கிய வளமும்
தனித்தன்மையும் செம்மொழியாம்
தமிழ்மொழி செம்மொழியாம்
தமிழே உயிர் மூச்சாம்

கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை



தன்னுடைய அலுவலகத்திற்கு வந்திருந்த எல்லா எக்ஸ்க்யூடிவ் ஆபிசர்களிடம் கம்பெனியின் வளர்ச்சிக்கான செய்தியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது, செல் போன் சங்கீதமாக சப்திக்க, யாருடைய செல் என்று கவனிக்காமல் "ஹலோ தமிழரசு ஹியர் ஹூ இஸ் திஸ்" என்றான் கொஞ்சம் எரிச்சலாக.

"அரசு மகனே! எப்படி இருக்கிறாய்?" என்ற அம்மாவின் குரலைக் கேட்டதும் ஒருமுறை திக்கு முக்காடிப் போனான்.

எல்லாரும் தன்னையே கவனித்துக் கொண்டிருந்ததை பார்த்தும் "அம்மா ஒரு நிமிடம்" என்று சொல்லி விட்டு நீங்கள் கொஞ்ச நேரம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுங்கள். நான் திரும்பவும் வந்து கலந்து கொள்கிறேன்" என்று கூறி விட்டு வெளியே வந்தவன் கன்னத்தில் சிதறிய கண்ணீரை துடைத்து விட்டு "சொல்லுங்கள் அம்மா! எப்படி இருக்கீங்க?" என்றான்.

"நான் நல்லா இருக்கேம்பா. என்னுடைய சுகத்துக்கு ஒரு குறைச்சலும் இல்லை. நீ எப்படி இருக்கிறாய்? " எதிர் முனையில் அம்மாஅழுவதை உணர்ந்தான்.

அரசு உணர்ச்சிப் பிழம்பாகி "அம்மா நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" அவனை அடக்க முடியாமல் அழ ஆரம்பித்தான். கைகுட்டையால் முகத்தைத் மறைத்துக் கொண்டு.

"அழாதே அரசு. இத்தனை நாளாகியும் என்னைப் பார்க்கணும் என்று ஒரு முறை கூட உனக்கு தோன்ற வில்லையா ராஜா"

"அது… அது… வந்து.."

"தெரியுமடா. உன் தந்தையின் வைராக்கியம் உன்னிடமும் அப்படியேநிரம்பி வழிகிறது. ஏம்பா, பணம் சம்பாதிப்பதற்காக அம்மா, அப்பாவை ஒதுக்கி வைத்து விட்டுப் போக வேண்டுமா? ஏண்டா எங்களைப் பார்க்கத்தான் வரவில்லை. எத்தனை எத்தனை டெலிபோன்கள்.. கையில்லே செல்போன்.. ஒருமுறை தொலைபேசி எடுத்து என்னோடு பேசக்கூடாதா? நான் என்னடா தவறு செய்தேன்" அம்மா பேசமுடியாமல்..அழ ஆரம்பித்து... எதிர் முனையில் பேச முடியாமல் .......

"அம்மா வீணாக ஏன் அழுகிறீர்கள். தவறு செய்தது நான். சொந்தக் காலில் நிற்க வேண்டுமென்ற ஆர்வத்தில் ஏதோ ஒரு காந்தக் கவர்ச்சியில் இழுக்கப்பட்டு வந்தவன். உங்களோடு கூட பேச முயற்சிக்காமல்..." என அவன் முடிக்கும் முன் "ஒரு வேளை நம்ம வீட்டு போன் நம்பர் உனக்கு மறந்து போச்சோ என்னவோ" என்றார் அம்மா.

"ஏம்மா என்னைக் கொல்கிறீர்கள்?" என்று கெஞ்சினான்.

கோபத்தோடு "அரசு உனக்கு நம் வீடு எங்கிருக்கிறது என்று தெரியுமல்லவா?" என்று கேட்டாள் அம்மா.

"தயவு செய்து என்னைக் காயப்படுத்தாதீர்கள் அம்மா. போதும், இன்னும் கொஞ்சநாள்... கொஞ்சநாளில் உங்களைப் பார்க்க..... உங்களோடு உங்கள் பிள்ளையாக தங்கி இருக்க வந்து விடுவேன்.

"......"பேசமுடியாமல் அழ ஆரம்பித்த அம்மா, ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, "எப்போது கண்ணா வரப்போகிறாய்? என் கண்கள் மங்கி உன் முகம் காண முடியாமல் போன பிறகா? ஏண்டா உனக்கு கல் நெஞ்சா? இவ்வளவு நேரம் பேரிய பிறகும் அப்பா எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டாயா?" என்று கேட்டாள் அம்மா.

"அப்பாவிற்கு என்ன? நல்ல சுகமாக இருப்பார்கள். அப்பாவைப் பற்றி

"அப்பாவிற்கு என்ன? நல்ல சுகமாக இருப்பார்கள். அப்பாவைப் பற்றி அப்பாவின் மனைவி உன்னை விட அவரின் மகனான நான் மிகவும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். அவருடைய வறட்டுக் கவுரவம் அவர் சம்பாதித்தியத் தோடே வளர்ந்த விஷயம். அப்பாவிடம் எனக்குப் பிடித்த விஷயமே. சுவரிருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். முதலில் நம் உடம்பை கவனித்துக் கொண்டால்தான் நாம் மற்றவர்களை கவனிப்பதை மட்டுமன்றி சம்பாதிக்கவும் முடியும் என்று சொல்பவர் அது சரி, நீங்க எப்படி இருக்கீங்க?"

"நான்... எனக்கென்னப்பா. எங்களுக்கிருந்த செல்வம் நீயே என்னிடம் இருந்து போய்விட்ட பிறகு... என்ன மகிழ்ச்சி இந்த வாழ்க்கையில்.....? பாபு அடிக்கடி வந்து நீ எங்கிருக்கிறாய்....? எப்படி இருக்கிறாய்? என்பதைப் பற்றிச் சொல்லக் கேட்டுத்தான் மகிழ்ச்சியோடு இருக்க முயற்சிக்கிறோம்."

"ஓ பாபு.... அப்பாவின் நண்பர் இன்னும் என்னைத் துரத்திக் கொண்டு தானிருக்கிறாரா? சரி, அம்மா அப்புறம் போன் பண்ணுகிறேன்" என்று தொடர்பை துண்டித்து விட்டு தன் பணியாளர் ஒருவனை அழைத்து இந்த செல்லில் இருக்கும் கார்டை எடுத்து மாற்றி புது எண்ணுள்ள கார்டு போட்டுக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி விட்டு, உள்ளே வந்து ஹியூமென் ரிசோர்ஸ் டைரக்டர் இரவியை அழைத்து "என்னைக் கவனிக்க...என்னைத் தொடர்ந்து யாராவது வருகிறார்களா?" என்று கவனிக்க யாராவது ஒருவரை நியமியுங்கள்.

"எனக்கு ஒரு நாளைக்கு ஐந்து முறை ரிப்போர்ட் தரச் சொல்லுங்கள்" என்றான்.

"சரி சார்" என்று நகர்ந்தார் இரவி

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

## அத்தியாயம் 2

"வலி" என்ற வார்த்தைக்கு உருவம் இருக்கிறதா? என்ற கேள்வியை நம்மிடம் வைத்துக்கொண்டால் முதலில் நம்மால் சொல்லக்கூடிய பதில் -அது கண்ணீரோ, சிடுசிடுப்போ, அலறலோதான். ஆனால் உண்மையில் வலி என்பது ஒரு முகம் கொண்ட சிலை அல்ல; அது உயிரின் ஆழத்தில் பிறக்கும் உணர்வின் சாயல்.

ஒரு குழந்தை தடுமாறி விழும்போது கண்ணீர் சிந்தும், ஒரு இளைஞன் தனது கனவை இழக்கும் போது அவன் சிடுசிடுப்பாகி விடுவான், ஒரு தாய் தன் பிள்ளையை இழக்கும் போது - அவள் பேசாமல், கண்ணீரின்றி கூட மௌனமாய் இருக்கலாம். இவற்றின் அனைத்திலும் வலியின் வெளிப்பாடு மாறுபடும். ஆனால் ஒரே உண்மை -வலி உயிரோடு வாழ்கிறது.

*உணர்வின் எடுப்பு வலியை வெளிப்படுத்தும் விதமே அதன் உருவத்தை வரையறுக்கிறது. சிலர் கண்ணீரால் காட்டுவார்கள். சிலர் கோபத்தின் குரலில் வெளிப்படுத்துவார்கள். சிலர் மௌனமாகி விடுவார்கள்.
இது எல்லாம் வலியின் மொழிகள் தான்.

உதாரணமாக, ஒரு பிள்ளை பள்ளி பரீட்சையில் தோல்வியுற்று வந்து அழுவான். அவனது வலி "கண்ணீரின் உருவம்."
வேலை இழந்தவன் சிடுசிடுத்து பேசுவான். அவனது வலி "கோபத்தின் உருவம்."



அன்புக்குரியவரால் துரோகம் செய்யப்பட்ட ஒருவர் - வார்த்தை இல்லாமல் உறைந்து போவார். அது "மௌனத்தின் உருவம்."

இவ்வாறு, வலிக்கு ஒரே ஒரு முகம் கிடையாது; அது உணர்ச்சிகளின் கண்ணாடி.வலி வெளிப்பாடுவெவ்வேறாய் மனித இயல்பு அடிப்படையில் மாறுபடும்.

கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

அத்தியாயம் 2

மனிதனின் தவறான பார்வை

ஒருவர் "வலிக்கிறது" என்று சொன்னால் - அதை நாம் பெரும்பாலும் வார்த்தையாகவே எடுத்துக்கொள்கிறோம். "அவனுக்கு காயம் தான்," அல்லது "சின்ன விஷயத்துக்கு இவ்வளவு கவலை வேண்டாமே" என்று உதாசீனம் செய்கிறோம். ஆனால் உண்மையில், வலியைச் சொன்னவரின் உள்ளம் - எரிகிறது, நசிகிறது, இடிக்கிறது.

இந்த உலகில் பெரும்பாலான காயங்கள் புறக்கணிப்பால் அதிகரிக்கின்றன. வலியை உணராமல், வெறும் வார்த்தையாகவே கருதுவதால்தான் ஒருவரை மீண்டும் மீண்டும் காயப்படுத்துகிறோம்.

விலங்குகளின் வலி:

வலி என்பது மனிதனுக்கே உரியது அல்ல. ஒரு நாய் அடிபட்டால் குரைக்கும். ஒரு பசு குட்டியை இழந்தால், கண்ணீர் சிந்துவது போல குமுறும். ஒரு பறவை கூட தனது கூடு உடைக்கப்பட்டால் மீண்டும் மீண்டும் அலறி பறக்கும். இதுவே வலியின் சர்வதேச மொழி.

ஆனால் விலங்குகளின் வலி உடலில் வெளிப்படும்; மனிதனின் வலி பெரும்பாலும் உள்ளத்தில் பிறக்கிறது. அதனால்தான் மனிதனின் வலி எடைமிக்கது, சிக்கலானது, சொல்லமுடியாதது.


வலிக்கு தனிப்பட்ட உருவம் இல்லை. ஆனால் நம்முடைய உணர்வுகள் -கண்ணீர், சிடுசிடுப்பு, கோபம், மௌனம் -அனைத்தும் வலியின் முகங்கள். ஒவ்வொரு முறையும் நாம் வெளிப்படுத்தும் உணர்ச்சி, அந்த வலியின் உருவமாகவே பிறக்கிறது. ஆகவே, வலியைப் புரிந்துகொள்வதே வலிக்கான முதல் ஆறுதல். அதை தவிர்க்கவோ, மறைக்கவோ, குறைத்து மதிப்பிடவோ கூடாது. வலி எதையும் கற்றுத் தருகிறது- மனிதனாக இருப்பதன் உண்மையை, உணர்வின் ஆழத்தை, கருணையின் தேவையை.

வலி என்பது வார்த்தையல்ல. அது உயிரின் மொழி.
அதை உணர்ந்தால் மட்டுமே நாம் மனிதர்கள் ஆகிறோம்.

தேடலாகும்..

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

முனைவர் இரா. முத்துப்பாண்டி அவர்களின் "என் மொழிகள் " என்ற பொன்மொழிகள் நூல் வாங்கி வாசித்தேன்.
உலகில் நிறைய அறிஞர் பெருமக்கள் கூறிய தத்துவ, சித்தாதங்களே பொன்மொழிகளாகக் கருதப்படுகிறது,




அந்த வரிசையில் முனைவர் இரா. முத்துப்பாண்டி அவர்கள் எழுதி, நிவேதிதா பதிப்பகம் வெளியிட்டுள்ள " என் மொழிகள் ' உலகின் முதல் பொன் மொழிகள் நூலாக வந்திருக்கிறது, தமிழ் மொழிக்குக் கிடைத்த பெருமை தான்,

நூல் வாசிக்க ஆரம்பித்ததும் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது, ஆம் வாழ்வியலுக்குத், தேவையான மற்றும்
பயனுள்ள பல தகவல்கள் பொக்கிஷமாகக் கிடைத்துள்ளது எங்கும் காணாத சிறப்புதான்,

மூன்று வரிகளில் வாழ்க்கையின் நெறிகளையும், வெற்றியின் படிக்கட்டுகளையும், தனி மனித ஒழுக்கத்தையும் காண முடிகிறது,

அனைத்து மாணவர்கள், இளைஞரகள் என அனைவரும் அவசியம் வாங்கி வாசிக்க, பத்திரப்படுத்த வேண்டிய ஒரு நூல் தான் " என் மொழிகள் "

எல்லாத் தாய் மொழியிலேயும் பொன் மொழிகள் உண்டு,
தமிழ் மொழியில் " என் மொழிகள் " நூல் உண்டு என்றே சொல்லலாம்...

இனி " என் மொழிகள் " நூலைப் பார்ப்போம்...

"உலகம் வாழ
மனிதர்கள் தேவையில்லை,
மரங்களே தேவை,
/
தாய் மொழியும்
தன் விழியும் ஒன்றுதான்
நாம்தான் காத்திட வேண்டும்.
/
படிக்கும் போது தெரிவதில்லை
படும்போது தெரியும்
படிப்பின் அருமை.
/
கண்டம்விட்டுக் கண்டம்
அன்பைச் செலுத்துவோம்
வேண்டாம் ஏவுணைகள்.
/
எழுத்துகளில் மட்டுமல்ல
எண்ணங்களிலும் இருக்க
வேண்டும் மெல்லினம்.

சிரித்துப் பேசுவது மிகவும் நல்லது,
நல்லதல்ல, பிறரைப் பற்றிப்
பேசிச் சிரிப்பது.
/
ஏமாறுவது குற்றமன்றுதொடர்ந்து
ஏமாறுவதே பெருங்குற்றம்.

என மொத்தம் 162 அழகிய பொன் மொழிகள் அடங்கிய " என் மொழிகள் " நூலை வாங்கி வாசியுங்கள், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்... வாழ்த்துகள் முனைவர் இரா. முத்துப்பாண்டி ஐயா.

இன்னும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கும், உலக மக்களுக்கும் தொடர்ந்து எழுதி வாழுங்கள் என அன்போடு வாழ்த்துகிறேன் ஐயா.

கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சோத் கவுண்டன் புதூர்

# நதிகளைத் தேடும் மழை

**நூல் அனுபவம்** **கவிதைத் தொகுப்பு**

**முத்தையா மோகன் ; முதல் பதிப்பு ஜூன் 2025**
**பக்கம் 86 ; விலை ரூபாய் 100 ; வெளியீடு: இளந்துளி பதிப்பகம் தேனீ**

"என் கவிதைகள் என்பது என்னைச் சுற்றி பின்னப்பட்டிருக்கும் தந்திர வலைகளைப் பற்றிய சூட்சுமங்களை உடைப்பதே ஆகும். எதையும் கண்டும் காணாமல் போகிறவன் ஒரு படைப்பாளியாக இருக்க முடியாது. புதுமை என்ற இலக்கிலிருந்து விலகியோ தவிர்த்தோ எழுதுபவன் கழுவுகிற மீனில் நழுவுகிற வகையைச் சார்ந்தவனாய் மட்டுமே இருப்பான். என் கவிதைகள் என்பது பொதுமையையும் புதுமையையும் ஏற்படுத்துகிற எடுத்தியம்புகிற ஆயுதமாய் விளங்க வேண்டும் என்ற என் எழுத்துப் பயணத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்" என்று முன்னுரையில் கவிஞர் குறிப்பிட்டிருப்பதைப் போலவே பொதுவுடமைக் கருத்துக்களை ஆழ உள்வாங்கி இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப அதை வாசகனுக்குக் கடத்தும் பெரும் பொறுப்பை ஏற்று செயல்பட்டிருக்கிறார் இந்த நூலில் கவிஞர் முத்தையா மோகன்.




நம் மனதுக்கு நெருக்கமான வார்த்தைகளைக் கொண்டும் நமது உறவினர்களைப் போலவும் உடன்பிறப்பை போலவும் துன்பத்திலும் இன்பத்திலும் உடன் நின்று நம்மை ஆசுவாசப்படுத்தியும் தோழமையாக எழுதப்பட்டிருக்கும் இந்தக் கவிதைகளில் யதார்த்த நிலைகள் வரிகளில் தென்பட்டு உலகின் இயல்பை நமக்குள் கடத்துகின்றன.

பெண்களை கைக்கொள்ளும் சமூகத்தின் போக்கு, பெண்களுக்கு உரமூட்டி வீரமேற்றும் வழிப்பாதைகள், விவசாயத்தின் அவல நிலையும் விவசாயிகளின் இன்னல்களும், அப்பாவை மதிக்காத மகனையும் அப்பாவான பின்னே பிள்ளையைக் காணும் போக்கும், வன அழிப்பின்

கவிஞர் இளையவன் சிவா

பின்னே அதிகாரத்தின் போக்கும் அரசியல் பின்னணியும் காட்டும் வெறியும், ஒழுக்கமும் அறச்சிந்தனைகளும் உதறிவிட்டு முள்ளம்பன்றித் தலையோடு உலவிடும் மாணவர் கூட்டமும், விளைநிலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் ஏரி குளங்கள் காணாமல் போக அலையும் மழையும், முயற்சியையும் பயிற்சியையும் முற்றிலும் மறந்துவிட்ட இளைய படையினர் மத்தியில் உலவிடும் சோம்பலை எடுத்துக்காட்டி எழுச்சி விதைகளை அள்ளிக் கொடுக்கும் ஏற்றக் கரங்களும், பிறருக்கு நன்மை பயக்காத நாக்குகள் எல்லாம் அமிலத்தின் அடியொட்டியே பிறந்தது என ஆக்ரோஷமிடும் கோபமும் நூலில் வரிகளாக மிதந்து வருகின்றன.

தாயென நின்றே தரணியில் நாம் வாழ பாலூட்டும் மொழியாகி பரவசத்தில் நம்மை பிழைக்க வைக்கும் அருந்தமிழ் உயிரென மொழி வணக்கத்துடன் நூலின் தொடக்கம் சாலச் சிறந்து அமைகிறது.

மரத்தை வெட்டி மாளிகை கட்டினாலும் வெடிப்புகளின் வழியே எட்டிப் பார்க்கும் விதையென "ஆவிகள் வாழும் வீட்டினில்" ஆனந்தம் அடைகின்றன மரமும் தளிரும். சுயநலப்பித்தேறி சுரண்டலுக்குள் தேசத்தைத் தள்ளி மடத்தனம் செய்தே நாளும் மடிந்திடும் அரசியல் தனத்தை ஏன் என்று கேட்கவும் நாதியற்று எப்போதும் சுமைதாங்கியாய் உலவிடும் மக்களுக்கு உதவிடக் கூட ஓர் தலைவன் பிறந்திடாமல் "யாருமற்ற சிலுவை" புலம்பித் தவிக்கிறது பக்கம் நான்கில்.

"நீர்க்குமிழி போன்று
திடமில்லா வாழ்வொன்றில் நீந்தி நெளிகிறது கனவுகள்."

"இருளைக் கிழிக்கும் ஒளியைப் போல எதையோ கிழித்தெறிய என் விழிகள் விசாலமாகிக் கொண்டே போகின்றன"

என தன்னை அடையாளம் காட்டும் கவிஞருக்குள் ஏற்றத்தாழ்வுகள் நீங்கி நீசத்தனங்கள் மடிந்து சமூகமும் மக்களும் சுகித்துக் கிடக்கும் சொர்க்கத்தை எட்டும் கனவுகள் நிரம்பி வழிகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

"துடுப்பு

துடுப்புகள் ஏதுமின்றி
தொடரும் பயணங்கள்
முடிவுகள் ஏதுமின்றி
விரியும் வினாக்கள்
நாளை என்பதின்றி
இன்று எதுவும் இல்லை
இன்றே முடியாத எதுவும் நாளைய வினாக்கள் தான் கேள்வியும் பதிலும்
எழாத இடந்தனில்
கேட்பாரற்றுப் போகும்
துடுப்பும் பயணங்களும்"

வினாக்களின் தொடர் உந்துதலே விடைகளைத் தேடும் எண்ணத்தை விதைக்கிறது. தேடல்களின் தொடக்கமே மனதை திசை நோக்கிய பயணத்தில் நடத்திச் செல்கிறது. உந்துதலும் வினாக்களும் இல்லையென்றால் உயிரற்ற பிணத்தின் வாழ்வைப் போல நின்றுவிடும் நம் இயக்கம் என்பதையே துடுப்பின் வழியே நங்கூரமாகச் சொல்கிறார் கவிஞர்.

கடன் வாங்கி பயிர் நட்டு கடன் வாங்கி களை எடுத்து கடன் வாங்கி அறுவடை செய்து கடனை அடைத்த பின்னே வெறுங்கையோடு வீடு சேரும் விவசாயிகளைக் கொண்டதாலேயே இந்தியாவை விவசாய நாடு என்கிறோம். விவசாயத்தின் பேரவலத்தையும் விவசாயிகளின் கஷ்ட காலங்களையும் நூலில் நிறைய இடங்களில் பொதுவுடமை கருத்துக்களால் எரிமலை என கவிதைகள் பொங்கி வழிகின்றன. விவசாயத்தைப் பற்றியும் விவசாயிகளின் நிலையைப் பற்றியும் எண்ணும்போதே இவரது வரிகளுக்குள் எரிமலையும் அமிலமும் சேர்ந்தே வந்து உட்கார்ந்து கொள்கின்றன. வார்த்தைகளை வாசிக்க வாசிக்க நமக்குள்ளேயே கோபத்தின் வெப்பம் அனலடிக்கத் தொடங்கி விடுகிறது

"இந்தியா 2030" என்ற கவிதை அறிவுறுத்துகிறது.

வீடுகளாய். வீதிகளாய் உருமாறிப்போன கண்மாயைத் தேடி பேரனுக்குக் காட்டிட அலைந்த தாத்தாவின் கதையில் வறண்டு போனது நீரல்ல அவரவர் எதிர்காலமும் தான் என்பதை எச்சரிக்கிறது "எதிர்காலம்" கவிதை. கரைபுரண்டு ஓடிய நீரைக் காணாமல் கழிப்பறையாகிப் போய் ஓய்வின்றி கிடக்கும் ஓடைக்கரையைப் பார்த்த பிறகும் அரசிற்கு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லையே என்ற வேதனை தெறிக்கிறது "தொலையாத ஒன்று" கவிதையில்.

"தெவசம்

கருமருந்தின்
நாற்றத்தால்
நுரையீரல்களில்
புகையாகும்
இடி மருந்தின்
துவம்சத்தால்
தோல்கள் எல்லாம்
புண்ணாகும்
கந்தகத் துகள்களால் கண்களெல்லாம்
மண்ணுக்குள்
மடியலாகும்
இடிச்சத்தமும்
வெடிச்சத்தமும் உயிர்பலியாக்கிட
ரத்தங்கள் சிதறும்
கால் வயிற்று கஞ்சிக்காக
கந்தகக் கலவியால்
கை கால்கள் முடமாகும்
பட்டாசு கம்பெனி வேலைன்னு
பகுமானமாய் சொல்லிக்கிட்டாலும்
அடிக்கடி வெடித்து சிதறும்
எங்கள் உயிர்களின்
தெவச தினம் தான்
நீங்கள் கொண்டாடும்
இனிய தீபாவளி"

புராணக் கதைகளில் நரகாசுர வதம் தீபாவளி என கொண்டாடப்பட்டாலும் தினம் வெடிமருந்திலும் தீப்பெட்டி ஆலைகளிலும் வயிறு வளர்க்க வாழ்வை நகர்த்த உயிரையே பணயம் வைக்கும் வறுமையின் பிள்ளைகளை காவுக்கொடுத்தே தீபாவளியைக் கொண்டாடி மகிழ்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கையில் வேதனை தான் மிஞ்சுகிறது.

அறச்செயல்களைப் பற்றி அறிந்திடாமலும் அறச் சிந்தனைகளுக்குள் தம்மை ஒப்புக் கொடுக்காது புறவயப்பட்ட பொழுதுகளில் தம்மைத் தொலைக்கும் இளவட்டங்களைத் தோலுரித்துக் காட்டுகிறது "மானங்கெட்ட கைப்பேசிகள்" கவிதை.

பெருகும் மக்கள் தொகை ஒரு பக்கம் குறைந்து வரும் வயல் பரப்பு மறுபக்கம் அதிகரிக்கும் உணவுத் தேவையின் அவசியம் எல்லாம் சேர்ந்து காட்டையும் கழனியையும் களவாடிய பின் நதியின் பாதையையும் அடைத்துவிட்டோம். அப்போது மழையின் வருகை எதை நோக்கி ஓடத் தொடங்குகிறது? பயனற்று கடலைத் தேடித்தான் நதி சங்கமிக்கத் தொடங்குகிறது என்று ""அட அட அட"" கவிதை முழங்குகிறது


"சருகுகள்

அப்படி ஒன்றும்
வேகமில்லை
வீசுகிற காற்று
இருந்தும்
அங்கும் இங்கும்
அலைமோதும்
காய்ந்த சருகொன்று
ஓய்ந்த மாதம்
சித்தப்பா வீட்டிலும்
சரியும் மாதம்
எங்கள் வீட்டிலும்
எதிர்மாதம்
அத்தை வீட்டிற்குமாய்
அல்லாடித் திரியும்
தாத்தாவைப் போல
அப்படி ஒன்றும்
வேகம் இல்லை
வீசுகிற காற்று
இருந்தும்
அங்கும் இங்கும்
அலைமோதும்
காய்ந்த சருகொன்று"

மரங்கள் வயதானால் எரிக்கவாவது உதவிடும். மனிதர்கள் வயதானால் எதற்கும் உதவாது என்று அனாதையாக்கிவிட்டே அலையவிடும் பிள்ளைகளின் எண்ணிக்கை பெருகிவிட்ட காலச் சூழலில் காற்றில் அலையும் காய்ந்த சருகைப் போல அல்லாடும் தாத்தாவை படிக்கையில் கண்ணீரில் நனைந்த விழிகளை துடைத்திடவும் நீளாது ஒடுங்கிக்

கிடக்கிறது உள்ளம்.

புதுயுகம் பிறந்திட வேண்டும் என்றால் புதுமைகள் வழி நின்று சமத்துவ சகோதரத்துவ சமுதாயத்தை படைத்திட வேண்டுமென்றால் இனம் மொழி சாதியின் அடிப்படையில் மனங்களைப் பிரித்தாலும் சூழ்ச்சிகளை வேரறுப்பது காலத்தின் அவசியமாகிப் போகிறது. ஏற்றத்தாழ்வுகளை மக்கள் மீது திணித்து நயவஞ்சகத்தாலும் இனிப்பு தடவிய விஷத்தை கொடுத்தும் வேரறுக்கும் மனிதப் பதர்கள் நிறைந்திருக்கும் இந்த பூமியில் சமூக ஒழுக்கங்களையும் அறச் செயல்களையும் ஒவ்வொரு மனங்களுக்குள்ளும் விதைத்திட வேண்டும் என்ற லட்சியத்தோடு நதிகளைத் தேடும் மழை புறப்படுகிறது. இந்த மழையில் நனைந்து நம்மை நமக்குள்ளேயே கழுவிக்கொண்டால் இவை சங்கமமாகும் பெருங்கடல்கள் பேரன்பாகவும் கருணையாகவும் உலகத்தில் நிலைத்து விடும்.




கவிஞர் இளையவன் சிவா

# ஆலயத்தின் சிறப்புகள்

## கட்டுரை

ஆலயத்தின் உள்ளே நுழையும் போது கோவிலின் வெளியே "கோபுர தரிசனம் கோடி புண்ணியமாகும்" மனித உடல் தான் ஆலயத்தின் அமைப்பாகும். ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவனை மனதார வணங்கும் போது மனம் தூய்மை அடையும். இறைவனை நினைத்து கோவிலுக்கு செல்லும்போது கோவிலில் எண்ண அலைகள் அதிகமாக இருக்கும். நாம் நினைக்கும் எண்ணம் நிச்சயம் நிறைவேறும்.



மனதால் இறைவனை பூஜிக்கும் போது மனம் தெளிவடையும். யாருக்கு எதை கொடுக்க வேண்டும். யாருக்கு எதை எடுக்க வேண்டுமென்று நிச்சயம் இறைவனுக்கு தெரியும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

ஆலயத்திற்கு செல்லும் போது இறைவனுக்காக எதை ஆலயத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். பார்ப்போம்:

இறைவன் மனம் குளிர பூமாலை தொடுத்து, பாமாலை பாடும்போது இறைவன் அகம் மகிழ்ந்து நினைத்ததை நிறைவேற்றித் தருவார்.
இறைவனை சுற்றி வலம் வரும் போது வலதுப்புறத்தில் தொடங்கி இடதுப்புறமாக தான் பிரகாரத்தை வலம் வர வேண்டும். அதுவே ஐதீகமாகும். தெய்வத்திற்கு எத்தனை முறை கோயிலை சுற்றி வலம் வர வேண்டும் என்று பார்த்தால்,

கவிஞர் மா. நந்தினி, சேலம்

1.கணபதிக்கு ஒரு பிரகாரம்
2.சூரியனுக்கு இரண்டு பிரகாரம்
3.சிவன் பார்வதிக்கு மூன்று
4.விஷ்ணு இலக்குமி நான்கு பிரகாரம்
5.நவகிரகங்களுக்கு ஒன்பது முறை நவகிரகங்களை சுற்றி வலம் வர வேண்டும்.

இறைவனை பக்தியுடன் வணங்கினால் போதும். கேட்ட வரங்களை நமக்கு அளித்து அருளுவார்.



கவிஞர் மா. நந்தினி, சேலம்

## பிறப்பு, கல்வி



ச.வே.சுப்ரமணியன் திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் சு. சண்முகவேலாயுதம், இராமலக்குமி இணையருக்கு டிசம்பர் 31, 1929-ல் பிறந்தார். விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள புனித இருதய மேல்நிலைத் தொடக்கப் பள்ளியிலும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பயின்று,

1950 -1953-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்தைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து பெற்றார்.

## தனிவாழ்க்கை

1953-1956 காலப்பகுதியில் தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் தமிழ் பயிற்றுநராகப் பணியைத் தொடங்கி, பின்னர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும், திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றினார்.

## உலகத்தமிழ்க்கல்வி இயக்கம்

## இலக்கிய வாழ்க்கை

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்த ச.வே.சுப்ரமணியன் கம்பராமாயணம், சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு நூல்களையும் இலக்கண ஆய்வுகளையும் வெளியிட்டுள்ளார்.

நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் 1969-ல் திருவள்ளுவர் கல்லூரியை உருவாக்கி குன்றக்குடி ஆதீன நிர்வாகத்திற்கு அளித்தார். இவருடைய வழிகாட்டலில் 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

நெல்லை அருகே பல ஏக்கர் நிலம் வாங்கி அங்கே தமிழூர் என்னும் சிறுநகரை உருவாக்கினார். அங்கே உலகத்தமிழ் கல்வி இயக்கம் என்னும் அமைப்பை நிறுவி 25000 நூல்கள் கொண்ட மூன்று நூலகங்களையும் உருவாக்கினார். தமிழ்மாணவர்கள் தங்கி ஆய்வுசெய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தினார். வேளாண்மையில் ஈடுபாடுகொண்ட ச.வே.சுப்ரமணியம் தன் நிலத்தில் வேளாண்மைப் பட்டையப்படிப்பு வகுப்புகளையும் சிலகாலம் நடத்தினார்.

## விருதுகள்

- செந்தமிழ்ச் செம்மல் விருது
- இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி விருது
- சாகித்திய அகாதெமி வழங்கிய பாஷா சம்மான் விருது
- தமிழாகரர் விருது
- சைவநன்மணி விருது
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை விருது
- ஔவைத்தமிழ் அருளாளர் விருது


திரு அ. வில்சன், இதழாசிரியர்

## விருதுகள்

- தமிழியக்கச் செம்மல் விருது
- ராஜா அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை விருது
- தொல்காப்பியச் செம்மல் விருது
- சென்னை கம்பன் விருது
- தமிழக அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது
- கலைஞர் விருது ரூ. 1 இலட்சம் பரிசு
- தருமபுர ஆதீனம் செந்தமிழ்க் கலாநிதி விருது

## நூல்கள்

- இலக்கிய நினைவுகள் (1964)
- சிலம்பின் சில பரல்கள் (1972)
- இலக்கியக் கனவுகள் (1972)
- மாந்தர் சிறப்பு (1974)
- ஒன்று நன்று (1976)
- அடியார்க்கு நல்லார் உரைத்திறன் (1976)
- இலக்கிய உணர்வுகள் (1978)
- கம்பன் கற்பனை (1978)
- காப்பியப் புனைதிறன் (1979)
- கம்பனும் உலகியல் அறிவும் (1981)
- கம்பன் இலக்கிய உத்திகள் (1982)
- கம்பன் கவித்திறன் (2004)
- இளங்கோவின் இலக்கிய உத்திகள் (1984)
- இலக்கிய வகையும் வடிவும் (1984)
- தமிழ் இலக்கிய வரலாறு (1999)
- சிலப்பதிகாரம் மூலம் (2001)
- சிலப்பதிகாரம் இசைப்பாடல்கள் (2001)
- சிலம்பும் சிந்தாமணியும் (1977)



- சிலம்பும் சிந்தாமணியும் (1977)
- திராவிட மொழி இலக்கியங்கள் (1984)
- இளங்கோவும் கம்பனும் (1986)
- தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் (1998)
- தமிழில் விடுகதைகள் (1975)
- தமிழில் விடுகதைக் களஞ்சியம் (2003)
- காந்தி கண்ட மனிதன் (1969)
- பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் (1982)
- நல்வாழ்க்கை (1992)
- மனிதம் (1995)
- மனமும் உயிரும் (1996)
- உடல் உள்ளம் உயிர் (2004)
- தமிழர் வாழ்வில் தாவரம் (1993)
- கூவநூல் (1980)
- சிலப்பதிகாரம் தெளிவுரை (1998)
- சிலப்பதிகாரம் மங்கலவாழ்த்துப் பாடல் (1993)
- தொல்காப்பியம் தெளிவுரை (1998)
- சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை (2001)
- திருக்குறள் நயவுரை (2001)
- திருமுருகாற்றுப்படை தெளிவுரை (2002)
- சிலப்பதிகாரம் குன்றக்குரவை உரை (2002)
- கானல்வரி உரை (2002)
- பத்துப்பாட்டு உரை (2002)
- இலக்கணத்தொகை எழுத்து (1967)
- இலக்கணத்தொகை சொல் (1970)
- இலக்கணத்தொகை யாப்பு,பாட்டியல் (1978)
- வீரசோழியம் குறிப்புரையுடன் (1977)
- தொன்னூல் விளக்கம் குறிப்புரையுடன் (1978)

- தொன்னூல் விளக்கம் குறிப்புரையுடன் (1978)
- குவலயானந்தம் சந்திரலோகம் (1979)
- பிரபந்த தீபம் (1980)
- தொல்காப்பியப் பதிப்புகள் (1992)
- மொழிக்கட்டுரைகள் (1974)
- சங்க இலக்கியம் (2006)
- மெய்யப்பன் தமிழகராதி (2006)
- தமிழ் இலக்கண நூல்கள் (2007)
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (2007)
- பன்னிரு திருமுறைகள் (2007)
- Descriptive Grammar of Chilappathikaram (1975)
- Grammar of Akananuru (1972)
- Studies in Tamil Language and Literature (1973)
- Studies in Tamilology (1982)
- Tolkappiyam in English (2004)
- சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் (மலையாளம்) (1966)

### மறைவு

ஒரு விபத்துக்குப் பின் சிலகாலம் நோயுற்றிருந்த ச.வே.சுப்ரமணியன் ஜனவரி 12, 2017-ல் மறைந்தார்.

# நாளை நமதே

## பறக்க நீ தயாரானால்
## தானாகவே முளைக்கும்
## சிறகுகள்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com